தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 மார்ச் 19, திங்கட்கிழமை.

பங்குனி 6, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்''

சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல்சேர்க்கப் பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும் இன்பத்தையும் கொடுக்கும்.

1. தகவல் கோரல்.

(அ) மேலவை (பட்டதாரி தொகுதி) தேர்தலில் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படும் தவறுகள்.

திரு. பொ. விஜயராகவன்: நேற்றைக்கு நடைபெற்ற சட்ட மன்ற மேலவை உறுப்பினர் (பட்டதாரி தொகுதி) தேர்தலில் ஏராளமான தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பது மட்டு மல்ல. பல்வேறு ஊழல்கள் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேர்தலை நடத்துவது நான் அல்ல. (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால். ஸ்பீக்கர் சம்பந்தமாக இருந்தால் சொல்லுங்கள். தேர்தல் பற்றிய ஒரு டிமாண்டு வருகிறது. (குறுக்கீடு)

Thiru R. UMANATH: We may be permitted to have a discuission. Unfair methods have been followed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஃபேரா, அன்ஃபேரா (fair or unfair) என்பதைப்பற்றி நாம் எப்படி முடிவு எடுக்க முடியும்?

திரு. ரா. உமாநாத்: மரத்தடியில் வோட்டர்கள் இருப்பதாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது பப்ளிக் இம்பார்ட்டன்ஸ் உள்ள பிரச்சினை (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறுகள் நடந்திருக்கலாம். நான் ஒத்துக்கொள்கிறேன். நீங்கள் முறையாகக் கொண்டு வாருங்கள். பட்ஜெட் விவாதத்தில் இதையெல்லாம் வைத்தால் சரியாக வராது.

திரு. ரா. உமாநாத்: ஹோல் பிராசஸ் பற்றி விவாதிக்க வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று நடந்த தேர்தல் முறையைப் பற்றி நாம் எப்படி முடிவு எடுக்க முடியும்? எலெக்ஷன் பெடிஷன் மீதுதான் இதையெல்லாம் பற்றி டிஸ்கஸ் செய்வார்கள். (குறுக்கீடு)

Thiru R. UMANATH: A discussion shall be permitted on this important issue. Unfair methods have been adopted. I am not saying about the Candidates problem.

(குறுக்கீடு) அதைப்பற்றி பொதுவாக ஜனங்கள் மத்தியிலே தவறான கருத்து உருவாகியிருக்கலாம். நான் இந்த டிஸ்கஷன் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 11 மணிக்கு மேல் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுகிறேன். அதிலே வேண்டுமானா பேசி முடிவு எடுக்கலாம். நோட்டீஸ் கொடுங்கள்.

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதம் 8 ஆம் தேதியன்று என்னுடைய தொகுதியில் தண்டலம் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்துகொண்ட வன்முறையாளர்களை . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி 54 விதியின் கீழ் ஏற்கனவே கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அது வரும்போது பேசிக்கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி: முதலில் 54-ல் கொடுத்திருக்கிறார்கள் அதுதிரும்பவும் வந்துவிட்டது. (குறுக்கீடு) மறுபடியும் கொடுத்திருக்கிறார்கள்.